# கணக்கீடு

## வரையறுத்த கம்பனி தொடர்பாகக் காணப்படும் சட்டப் பின்னணிகள்



Start Your Learning Journey with e-thaksalawa
The National e-learning Portal for The General Education

**தேர்ச்சி 12**

**தேர்ச்சி மட்டம் 12.1**

## வரையறுத்த கம்பனி தொடர்பாகக் காணப்படும் சட்டப் பின்னணிகள்

### கம்பனிகள்

இலங்கையின் 2007 ஆம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு உருவாக்கப்படும் அமைப்புகளே கம்பனிகள் ஆகும். கம்பனிச் சட்டப்படி அமைப்பு அகவிதியில் குறிப்பிடப்பட்ட பங்குகளை வழங்கி மூலதனைத்தை திரட்டக் கூடியதான நிறுவன அமைப்புகள் கம்பனி எனலாம்.

### கம்பனியின் இழிவுப் பங்குதாரரும் உச்சப் பங்குதாரரும்

2007ம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்திற்கேற்ப வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி, பொதுக்கம்பனி எனும் இருவகைக் கம்பனிகளிலும் ஆகக் குறைந்த பங்குதாரர் எண்ணிக்கை ஒருவராகும். தணிக்கம்பனியொன்றின் உச்ச பங்குதாரர் எண்ணிக்கை 50 ஆகும். பொதுக் கம்பனியொன்றின் உச்ச பங்குதாரர் எண்ணிக்கை வரையறுக்கப்படவில்லை.

### 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச் சட்டம்

இலங்கையினுள் கம்பனியொன்றை ஆரம்பிக்கும்போதும் நடாத்திச் செல்லும்போதும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை உள்ளடக்கி பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்ட ஆவணமே இதுவாகும். இதில் காட்டப்படுள்ளவாறு கம்பனி பின்வருமாறு வகைப்படுத்தப்படுகிறது.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

- கம்பனிகள்
  - வரையறுக்கப்பட்ட கம்பனிகள்
    - உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள்
    - பங்குகளால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள்
      - வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகள்
      - வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனிகள்
      - வரையறுக்கப்பட்ட கரைகடந்த கம்பனிகள்
      - வெளிநாட்டுக் கம்பனிகள்
  - வரையறுக்கப்படாத கம்பனிகள்

## வரையறுக்கப்பட்ட கம்பனிகள்

அமைப்பு அகவிதியில் கூறப்பட்ட பங்கு மூலதனத்தின் அளவுக்கு பங்காளர்களுடைய பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ள கம்பனி அமைப்புகளே இவையாகும்.

தொகுப்பு : திரு.ம.அசோக்குமார் ஆசிரியர் - கணக்கீடு, (யா/ யாழ்ப்பாண இந்துக்கல்லூரி)

கணணி வடிவமைப்பு : திரு.ஜெ.ஜனார்த்தனன் ஆசிரியர் - கணிதம், (கிளி/ கனகாம்பிகைக்குளம் அ.த.க பாடசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## வரையறுக்கப்படாத கம்பனிகள்

அகவிதியின்படி கம்பனியின் பங்குகளுக்கு மட்டுப்படாத பொறுப்புகளை தீர்க்கும்போது வரையறையின்றிச் சொத்துக்களைப் பயன்படுத்த வேண்டிய கம்பனி வரையறுக்கப்படாத கம்பனியாகும்.

**உதாரணம் :-** The Equitable Life Assurance Society(UK company number00037038)

## உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள்

கம்பனி முடிவுறுத்தும்போது, கம்பனி அகவிதியில் திட்டவட்டமாகக் குறிப்பிட்ட அளவுக்கு மட்டும் சொத்துக்களை பயன்படுத்தக்கூடிய கம்பனி உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனி ஆகும்

**உதாரணம்** :- Oxfam, The Sri Lanka Banks' Association(Guarantee)Ltd

## வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகள்

பங்குகளை அல்லது வேறு பிணைப் பத்திரங்களை பொதுமக்களுக்கு வழங்குவது தடை செய்யப்பட்டுள்ள 01இருந்து 50க்குள் பங்குதாரர்களைக் கொண்ட பொறுப்பு வரையறுக்கப்பட்ட சட்ட அலகு இதுவாகும்.

**உதாரணம்** :- Ecom Technology Lanka(Pvt)Limited

## வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனி

பங்குகளை பகிரங்கமாக பொதுமக்களுக்கு வழங்கக்கூடிய பொறுப்பு வரையறுக்கப்பட்ட சட்ட அலகு இதுவாகும்.

**உதாரணம்** :- NawalokaHospitals(Ltd)



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## வரையறுக்கப்பட்ட கரைகடந்த கம்பனி

இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனி இலங்கைக்கு வெளியில் கருமங்களை நடாத்துவதற்காக இந்நாட்டுக் கம்பனிச் சட்டத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கின்ற கம்பனிகளைக் குறிக்கிறது.

**உதாரணம்** :- HSBC

## வெளிநாட்டுக் கம்பனிகள் / கடல் கடந்த கம்பனிகள்(Off Shore Companies)

இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டு இலங்கையின் கம்பனிச் சட்டத்திற்கமைய பதிவு செய்யப்பட்டதன் பின் இலங்கையில் தொழிற் திறக்கக்கூடிய அல்லது ஏற்கனவே திறந்திருக்கும் தொழிலை தொடர்ந்து நடாத்தக்கூடிய கம்பனிகள் குறிக்கிறது.

**உதாரணம்** :- HorizonMediaNetwork(Pvt)

## கம்பனி கூட்டிணைத்தல்

ஒரு கம்பனி பதிவு செய்வதற்கு ஆரம்ப பங்குதாரர் ஒருவருவரினாலும் கை-யொப்பம் இடப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் பின்வரும் ஆவணங்களையும் கம்பனி பதிவாளரிடம் சமர்பித்து கம்பனிச் சட்டத்திற்கமைய பதிவு செய்து கூட்டிணைவுச் சான்றிதழினை பெற்றுக்கொள்வதனை கம்பனி கூட்டிணைத்தல் எனலாம்.

## கம்பனியின் உரிமை மூலதனம்

கம்பனியின் பங்குதாரர்கள் கம்பனியின் சொத்துக்கள் மீது கொண்டுள்ள உரிமையின் அளவினையே உரிமை மூலதனம் எனலாம். ஆவையாவன

1. கூறப்பட்ட மூலதனம் (Stated Capital)
2. ஒதுக்கங்கள்
3. பகிரப்படாத இலாபம்



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றை உருவாக்கும் போது முன்வைக்க வேண்டிய ஆவணங்கள்




## வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றிக்கும், வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியொன்றிக்கும் இடையிலான வேறுபாடுகள்

| வரையறுக்கப்பட்ட தனிக்கம்பனி | வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனி |
|---|---|
| பங்குதாரர்களின் எண்ணிக்கை ஆகக் குறைந்தது 01 ஆகும் | ஆகக் குறைந்த 01ஆகும், உச்ச எண்ணிக்கை வரையறையில்லை |
| பகிரங்கமாக பங்குகளை வெளியீடு செய்வதற்கு அனுமதியில்லை | பகிரங்கமாக பங்குகளை வெளியிடலாம் |
| இயக்குனர் சபையின் ஆகக் குறைந்த அங்கத்தவர் எண்ணிக்கை 1ஆகும் | இயக்குனர் சபையின் ஆகக் குறைந்த அங்கத்தவர் எண்ணிக்கை 2ஆகும் |
| கடன் தீர்க்குமாற்றல் தொடர்பான பரிசீலனையின்றி வழங்கல்களை மேற்கொள்ளலாம் | கடன் தீர்க்குமாற்றல் தொடர்பான பரிசீலனை மேற்கொள்ளப்படல் வேண்டும் |
| ஆண்டறிக்கையுடன் நிதிக்கூற்றினை முன்வைக்க வேண்டியது கட்டாயமில்லை | ஆண்டறிக்கையுடன் நிதிக்கூற்றினை முன்வைப்பது கட்டாயமாகும் |



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## கூறப்பட மூலதனம் (58வது பிரிவு )

வழங்கிய பங்குகள்மீது கம்பனிக்கு கிடைத்த மற்றும் கிடைக்க வேண்டிய மொத்தப் பணத்தின் கூட்டுத்தொகையாகும்.

பங்குச்சந்தை சட்ட விதிகளுக்கமைய கூறப்பட்ட மூலதனம் என்பது பங்குவழச்சி வழச்சி முற்றும் இருந்த பணத்தொகை

## பங்கு(Share)

கம்பனியின் கூறப்பட்ட மூலதனத்தின் ஒரு அலகினையே பங்கு என அழைக்கப்படுகிறது பங்கு ஒன்றுக்கு நிலையான பெறுமதி காணப்படமாட்டாது

## பங்குகளின் தன்மையும் பங்குகளின் வகைகளும்

வரையறுக்கப்பட்ட கம்பனியின் பங்குகள் அசையும் சொத்தென்றாகும் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றினால் வழங்கக்கூடிய பங்குகளின் வகைகள் பின்வருமாறு







Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பங்குகளின் வகைகள்

1) **சாதாரண பங்குகள் / உரிமைப் பங்குகள் :-** கம்பனி உழைக்கும் இலாபத்தின் அடிப்படையில் இயக்குநர்களினால் பங்குலாபம் தீர்மானிக்கப்படும் பங்குகள் இதுவாகும். இப்பங்குதாரர்களே கம்பனியின் உரிமையாளர்களாகும்.

2) **முன்னுரிமைப் பங்குகள் :-** பங்குலாபம் பெறுவதிலும் முதலைத் திருப்பிப் பெறுவதிலும் முன்னுரிமை பெற்றுக்கொள்ளும் பங்குகள் இதுவாகும். இதில் பங்குலாபம் நிலையானதாகக் காணப்படும்

3) **விசேட பங்குகள் :-** கம்பனியை ஆரம்பிப்பதில் முன்னின்று கருமமாற்றியவர்களுக்கு வழங்கப்படும் பங்குகள் இதுவாகும். ஏனைய பங்குகளுக்கு இலாபம் வழங்கிய பின்னரே இதற்கு இலாபம் வழங்கப்படும். வாக்குரிமை உண்டு.

4) வரையறுக்கப்பட்ட அல்லது நிபந்தனையுடன் கூடிய வாக்குரிமை கிடைக்கப்பெறும் பங்குகள்

5) **வாக்குரிமையற்ற பங்குகள் :-** பொதுச்சபைக் கூட்டங்களில் வாக்களிக்கும் உரிமை அற்ற பங்குகள் இதுவாகும். இதற்கு சாதாரண பங்குகளுக்கு கிடைக்கும் ஏனைய சலுகைகள் உண்டு.

6) **மீட்கத்தக்க பங்குகள் :-** எதிர்காலத்தின்பின் குறித்த நிபந்தனையின் அடிப்படையில் கம்பனியால் பணம் செலுத்தி மீளப் பெற்றுக்கொள்ளும் பங்குகள் இதுவாகும். இதற்கு அகவிதி இடமளிக்க வேண்டும்

தொகுப்பு : திரு.ம.அசோக்குமார் ஆசிரியர் - கணக்கீடு, (யா/ யாழ்ப்பாண இந்துக்கல்லூரி)

கணணி வடிவமைப்பு : திரு.ஜெ.ஜனார்த்தனன் ஆசிரியர் - கணிதம், (கிளி/ கனகாம்பிகைக்குளம் அ.த.க பாடசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk